
# எண் விளக்கம் - 1




இது லகிரு, கமலா, ஆன், நிசார் ஆகியோர் தயாரித்த விளையாட்டுப் புகையிரதம் ஆகும். இப் பெட்டிகளில் உள்ள இலக்கங்கள் காட்டும் எண் 573 ஆகும்.

**1** இவ் வினாக்களுக்கான விடைகளைப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்.

(1) இந்த இலக்கங்களைக் கொண்டு ஆக்கக் கூடிய மிகப் பெரிய எண்குறி யாது?
(2) ஆக்கக் கூடிய மிகச் சிறிய எண்குறி யாது?
(3) ஆக்கக் கூடிய வேறு இரு எண்குறிகளை எழுதுங்கள்.

**2** **இவ் வினாக்களுக்கான விடைகளைப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்.**

உதாரணம்:

199 + 1 = 200




(1) 499 + 1 = ..................
(2) 699 + 1 = ..................
(3) 999 + 1 = ..................
(4) 799 + 1 = ..................

999 + 1 = 1000

999 இற்கு அடுத்த எண் ஆயிரம் ஆகும்.

**3** எண்களை எழுத்துக்களில் எழுதுங்கள்.

உதாரணம்:

1000 - ஓர் ஆயிரம்





(1) 2000 –

(2) 3000 –

(3) 4000 –

(4) 5000 –

இங்கு காட்டப்படும் எண் யாது?




இங்கு,




இங்கு காட்டப்படும் எண் 3249 ஆகும்.

3249 = 3000 + 200 + 40 + 9

மூவாயிரத்து இருநூற்று நாற்பத்தொன்பது


# எண் விளக்கம் - 1


எண் சட்டமொன்றினால் எண்ணொன்றைக் காட்டும் விதம்.


உதாரணம்:






**4** பின்வரும் எண் சட்டங்களில் காட்டப்பட்டுள்ள எண்களை எழுதுங்கள்.


(1)




(2)




(3)



(4)



(5)



(6)



(7)



(8)



**5** பின்வரும் எண்களை எண் சட்டங்களில் வரைந்து காட்டுங்கள்.

(1) 1348 (2) 4058

**6** இந்த அட்டவணையிலுள்ள வெற்றிடங்களை நிரப்புங்கள்.

| | எண் | இலக்கம் | இலக்கம் காட்டும் பெறுமதி |
|---|---|---|---|
| (1) | 2371 | 3 | நூறுகள் |
| (2) | 1260 | ............. | ஆயிரங்கள் |
| (3) | 3634 | ............. | பத்துக்கள் |
| (4) | 3000 | ............. | ஒன்றுக்கள் |
| (5) | 2736 | ............. | ஆயிரங்கள் |



# எண் விளக்கம் - 1

**7** இந்த அட்டவணையிலுள்ள வெற்றிடங்களை நிரப்புங்கள்




| எண் | இலக்கம் | இலக்கம் அமைந்துள்ள இடம் |
|---|---|---|
| 1 746 | 7 | நூறாம் இடம் |
| 3 294 | 3 | .................... |
| 2 304 | 0 | .................... |
| 1 029 | 1 | .................... |
| 4 570 | 5 | .................... |

**8** வெற்றிடங்களை நிரப்புங்கள்.

| எண் | சொற்களில் |
|---|---|
| 4 257 | நான்காயிரத்து இருநூற்று ஐம்பத்தேழு |
| 3 549 | மூவாயிரத்து .............. நாற்பத்தொன்பது |
| 2 325 | ...................................................... |
| .......... | ஆயிரத்து அறுநூற்று எழுபத்து நான்கு |
| 3 576 | மூவாயிரத்து ஐநூற்று ................ ஆறு |






**9** தரப்பட்டுள்ள எண்களுக்கு முந்திய, பிந்திய எண்களை எழுதுங்கள்.

| முந்திய எண் | எண் | பிந்திய எண் |
|---|---|---|
| 1 004 | 1 005 | 1 006 |
| ................. | 2 099 | ...................... |
| ................. | 3 000 | ...................... |
| ................. | 4 499 | ...................... |

**10** இக் கட்ட நிரைகளை உங்கள் பயிற்சிப் புத்தகத்தில் வரையுங்கள்.

(1) ஒவ்வொரு கட்ட நிரையினதும் முதலாவது கட்டத்தில் 5 இற்குக் குறைந்த இலக்கம் ஒன்றை எழுதுங்கள்.

(2) எஞ்சிய வெற்றுக் கட்டங்களுள் உங்களுக்கு விருப்பமான இலக்கங்களை எழுதுங்கள்.

(3) ஒவ்வொரு கட்ட நிரையிலும் ஆக்கப்படும் எண்களை உங்கள் பயிற்சிப் புத்தகத்தில் சொற்களில் எழுதுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| A | | | | |
| B | | | | |
| C | | | | |